# ஆச்சாரியார் ஆட்சி அநியாயம்.

## பள்ளிக்கூடங்கள் பாழ்.

## வைத்திய உதவி நாஸ்தி.

## சுகாதார வசதிகளுக்கு ஆபத்து.

## கடைசியில் ஹிந்தி கட்டாய பாடம்.

### தமிழர் விழ்ச்சிக்கு இனி என்ன வேண்டும்?

மே 29-ந் தேதி “குடிஅரசு” எழுதுவதர்வது;—

ஆரிய சூழ்ச்சிக்கும் தமிழர் (திராவிடர்) வீரத்திற்கும் போர் மூண்டுவிட்டது. மூளாமல் தடுக்க தமிழ் மக்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் பயனற்றதாகி விட்டன.

தமிழர்கட்குள் ஒற்றுமை இல்லை என்றும் தமிழர்களை காட்டிக் கொடுத்து தமிழர்களை அழிக்க தமிழ் மக்களில் தங்களுக்கு வேண்டிய “அநுமார்,” “சுக்கிரீவன்,” “விபீஷணன்” போன்ற இழிமக்கள் கிடைத்திருக்கிறார்கள. இன்னும் கிடைப்பார்கள் என்றும் கருதியிருக்கும் இறுமாப்பால் “நான் செய்வதைச் செய்கிறேன், உன்னால் ஆனதைப் பார்” என்றுசூழ்ச்சியில் வல்ல நமது ஆச்சாரியார் போர்க் கோலம் கொண்டுவிட்டார். பிரிட்டிஷ் ஆட்சியும் தனது சுயநலத்தையும், தமிழ் மக்களின் கதியற்ற நிலைமையும் கருதி தமிழர் மானத்தைச் சூறையாட ஆச்சாரியாருக்கு அனுமதிச்சீட்டு அளித்துவிட்டது. ஆதலால் எண்ணிக்கையில்பெருத்துஒற்றுமையின்றிச் சிதறி வலிமையில் சிறுத்துக் கிடக்கும் தமிழ் மக்களுக்கு போக்கிடம் இல்லாமல் இன்று நலிய வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

தமிழ் நாட்டில் பள்ளிகள் குறைக்கப் படுகின்றன.

வைத்தியர்களின் பொறுப்புகள் அகற்றப் படுகின்றன. போக்குவரவு சாதன வசதிகள் குறைக்கப்படுகின்றன.

கிராம நீர் நிலை சுகாதாரம் முதலிய சவுகரியங்கள் அலட்சியப் படுத்தப் படுகின்றன. இவற்றிற்குக் காரணம் ஆச்சாரியார் ஆட்சிக்கு பொருளாதார சவுகரியம் இல்லையாம். ஒரு ஜில்லாவில் மதுவிலக்குச் செய்யபட்டது என்கின்ற சாக்கை வைத்து தமிழ் நாடு முழுவதிலும் இக்கொடுமைகள் செய்யப் படுகின்றன. தமிழ் நாட்டின் பேரால் இரண்டு வருஷ வரவு செலவு திட்டத்தில் 3¼ கோடி ரூபாய் அரசாங்க நிருவாகத்திற்கு என்ற ஆச்சாரியார் ஆட்சி கடன்வாங்கியும்கூட பள்ளியைக் குறைத்து, பாதையைக்குறைத்து பண்டிதத்தை குறைத்து பாங்கைக் குறைத்து குடி தண்ணீர் வசதியைக் குறைத்து தான் நிர்வாகம் செய்யவேண்டிய நிலையில் இருந்து வருகிறது. இக்கொடுமையைத் தமிழ் மக்கள் இன்னும் சரியாபடி உணரவில்லை.

#### ஹிந்தி பலாத்காரம்.

இவை எப்படியோ போகட்டும் என்றாலும் ஹிந்தி பாஷை என்ற ஒரு பாஷையை ஆச்சாரியார் ஆட்சியானது தமிழ் மக்களுக்குள் கட்டாயமாகப்புகுத்த சபதம் செய்து கொண்டதானதுபொறுக்கமுடியாத கொடுமையாக இருந்து வருகிறது தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்கு இன்று 100-க்கு 90-பேர்களுக்குமேல தங்கள் தாய்மொழியில் (தமிழில்) கூட கையெழுத்துப் போடத்தெரியாத அவ்வளவு தற்குறி-பாமரத்தன்மை இருந்து வருகிறது. இதில் ஒரு விகிதத்தையாவது குறைக்க ஆச்சாரியார் ஆட்சி இதுவரை ஒரு சிறு முயற்சியும் எடுத்துக் கொண்டதாகச்சொல்லஎவ்வித ஆதாரத்தையும் காணமுடியவில்லை. இந்நிலையில் உள்ள தமிழ்மக்களுக்கு மற்ற ஒரு அந்நிய பாஷையைக் கொண்டு வந்து “வலுவில் புகுத்தித்தான் தீருவேன்” என்று ஆச்சாரியார் ஆட்சி சொல்லுமேயானால் இதில் ஏதாவது சூழ்ச்சியோ வஞ்சகமோ இல்லாமல் சிறிதாவது யோக்கியப்பொறுப்பு இருக்க முடியுமா என்று கேட்க வேண்டியிருக்கிறது.

உலகிலேயே இந்திய தேசம் கல்வி,அறிவற்றநாடு என்கின்ற தன்மையில் இருக்கும்போதும் குறிப்பாக தமிழ்நாடு மிக்க பாமரமக்களைக்கொண்டதாக இருக்கும்போதும் அதிலும் பழங்குடி மக்களாகிய தமிழர்களில் சராசரி 100க்கு 95 பேர்கள் தற்குறிகளாகவும் பெண்கள் 100க்கு 99 பேர் தற்குறிகளாகவும்இருக்கும்போதுபடிப்பில்லாதவர்களுக்கு படிப்பைக் கொடுக்க வழிகோலாமல் படித்து இருக்கும் மக்களுக்கே மற்றும் ஒரு பாஷை படிப்பிக்க முயற்சிப்பதும், பணம், ஊக்கம், நேரம் ஆகியவைகளை பாழாக்க முயற்சிப்பதும் எப்படி யோக்கியமானதும் நல்லெண்ணமுடையதுமான காரியமாகுமென்று மறுபடியும் கேட்கின்றோம்.

#### மனுமுறைக்குச் சூழ்ச்சி.

கல்விக்காக மக்களிடம் இருந்து வசூலிக்கும் வரி கல்வி இல்லாதவர்களுக்கு கல்வி கற்பிக்கவா அல்லது கற்றவர்களுக்கு மற்றுமொரு பாஷை கற்பிக்கவா என்று கேட்கின்றோம். இவைகளைப்பார்க்கும்போதும் தோழர் காந்தியார் முதலிய பல அரசியல் தலைவர்கள்

“இந்திய சுயராஜ்யம் பெறுவது என்றால் வருணாச்சிரம தர்மமாகிய மனுதர்ம ஆட்சி முறையை நிறுவுவது தான்”

என்று சொல்லிவந்ததைஇப்போது எப்படியோ சமயம் கிடைத்த உடன் மனுதர்ம ஆட்சி ஏற்படுத்த காந்தியாரின் பிரதம சிஷியர் என்று உரிமை பாராட்டிக்கொள்ளும் ஆச்சாரியாரின் ஆட்சி மூர்க்க முயற்சியில் இறங்கிவிட்டது.

இந்த வருணாச்சிரம மனுதர்ம ஆட்சி நிறுவப்பட்டால் இந்நாட்டுத் தமிழ் மக்களுடைய சுதந்திரம், வீரம், தன்மானம் ஆகியவை அடியோடு புதைக்கப்பட்டது என்பதுதான் கருத்தாகும்.

ஹிந்தி வடமொழி பாஷையை தழுவியது என்பதோடு ஹிந்தி பாஷையின் எழுத்துக்கள் அநேகமாக வடமொழிக்கு ஏற்பட்ட எழுத்துக்களேயாகும்.சப்தமும்பெரிதும் அதுவேயாகும் அப்பாஷையில் படிக்க வேண்டிய விஷயங்களும் படிக்க நேரும் விஷயங்களும் மனுதர்மத்தை ஆதரிக்க தூண்டும் விஷயங்களும் மனுதர்மப்படி நடக்கச் செய்யும் விஷயங்களுமேயாகும். தமிழ் நாடும் சிறப்பாக தமிழ் மக்களும் இன்றுள்ள இந்த இழிநிலைக்கு அதாவது தன் மான மற்று எதிரியைப் பணிந்தும் சார்ந்தும் வாழ்வு நடத்தும் மனப்பான்மை கொண்டு வாழ வேண்டிய நிலையில் இருப்பதற்குக்காரணம் ஆரிய சூழ்ச்சியால் மனுதர்ம முறையை ஒப்புக்கொண்டுஇதுவரைவாழ்ந்து வந்ததே யாகும்.

ஏதோ இடைக்காலங்களில் அவ்வப்போது ஒன்றிரண்டு தமிழர்கள் தங்கள் நாட்டின் பழைய நிலைமையும் சமூகத்தின் பழந்தன்மையும், தங்கள் கலைகளின் உயர்வையும் ஓர் சிறிதாவது உணர்ந்து செய்துவந்தஉண்மைத்தொண்டுகளினால் ‘தமிழர் ஆரியருக்கு அடிமைகளல்ல ஆரியருக்குத் தொண்டு செய்யப் பிறந்தவரல்ல ஆரியரின் போகப்பெண்டீர்களின் மக்களல்ல-சூத்திரர்களல்ல” என்று தலைநிமிர்ந்து பேசவும்பரைசாற்றவும் தமிழ் மக்களுக்கு உணர்த்தவுமான நிலை சற்று ஏற்பட்டும், மறைந்தும் மறுபடியும் தலைதூக்கியும் இப்படியே நடந்து வந்திருக்கிறது.

#### ஹிந்தி இஷ்டப்பாடமாகவாவது ஏன்?

ஹிந்திபாஷை கட்டாயபாடமாகக்கூடாது என்பதுதான் இன்று தமிழ்மக்களின் பிரார்த்தனையாக இருக்கிறதே தவிர மற்றபடி ஹிந்தி பாஷை தமிழர்கள் பள்ளியில் இஷ்ட பாடமாகவாவது ஏன் நுழைய வேண்டும்? என்று கேட்பதற்கு இதுவரை எந்தத் தமிழனும் முன் வரவில்லை. இங்கிலீஷ் ஏன் வந்தது தமிழன் பள்ளியில் எப்படி நுழைந்ததுஎன்று சிலர் கேட்கலாம், இங்கிலீஷை கொண்டுவந்தவர்கள் ஆரியர்கள் இங்கிலீஷை பரப்பினவர்கள். ஆரியர்கள் இங்கிலீஷால் பயனடைந்தவர்கள்ஆரியர்கள், இங்கிலீஷைப் புகுத்த உத்திரவு போட்டது பிரிட்டிஷார். ஆதலால் இங்கிலீஷ் தமிழர்கள் பள்ளியில்புகுந்ததற்குதமிழர்கள் சிறிதும் பொறுப்பாளிகள் அல்ல. இங்கிலீஷின் உதவியில் ஆட்சி ஆதிக்கத்தை கைப்பற்றிய ஆரியர்கள் தங்களைத் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு எதற்காக மற்றொரு அன்னிய பாஷையாகிய ஹிந்தியை தமிழ் நாட்டில் தமிழ் மக்களுக்கு பள்ளிகளில் புகுத்த வேண்டும் அதுவும் ஏன் கட்டாயப்படுத்த வேண்டும்? என்பதுதான் நமது கேள்வியாகும்.

எவ்வளவோ அதிருப்தியையும் எதிர்ப்பையும் கெஞ்சுதல்களையும், பிரார்த்தனைகளையும் சிறிதும் லட்சியம் செய்யாது ஹிந்தியைத்தமிழன் பள்ளியில் தமிழன் வரிப் பணத்தில் தமிழன் சம்மதமின்றி புகுத்த உத்திரவு போட்டாய்விட்டது.

#### இனி என்ன செய்வது? முஸ்லிம்களைப் பாருங்கள்.

இனி என்ன செய்வது என்பதுதான் நாம் பெரிதும் கவனிக்கவேண்டியதாகும். தமிழர்களில் ஒற்றுமையும் ஒன்றுபட்ட முயற்சியும் இன்மையே இன்றைய ஹிந்தி பலாத்காரத்திற்கு ஆதாரமாகும். என்னென்றால் முஸ்லிம்கள் ஒற்றுமையும் ஒன்றுபட்ட முயற்சியும்ஆச்சாரியாரின் அகம்பாவத்தையும் ஆணவத்தையும் சிதறடித்துவிடவில்லையா என்று பாருங்கள்.

#### “வந்தே மாதரம்” எங்கே?

வந்தேமாதரப்பாட்டு ஹிந்திபோல் புதிதாகக் கொண்டு வந்து நுழைக்கப்பட்டதல்ல. இந்திய தேசியம் என்பதில் இரண்டறக் கலந்ததாகும் என்று சொல்லப்பட்டது வந்தேமாதரப் பாட்டை நிறுத்துவது என்பதுபாரதமாதாவைக் கொலை செய்வதாகும் என்றும் சொல்லப்பட்டது. வந்தேமாதரப்பாட்டுக்குஎதிர்ப்பாய் மார்ச்சு5-ந்தேதி சத்தியாக்கிரகம் செய்யப்படும் என்று பிப்ரவரி மாதம் 7-ந்தேதி சென்னை மெயிலில் ஒரு ஒத்தை முஸ்லிம் வாலிபர் தோழர் எஸ். எஸ். பாமனிசாயபு தெரியப்படுத்தியவுடன் ஆச்சாரியார் மார்ச்சு 1-ந்தேதியிலேயே வந்தேமாதரப்பாட்டை நிறுத்திவிட்டதாக விளம்பரப்படுத்தி விட்டார்.

மற்றும் “ஹிந்து-முஸ்லிம்ஒற்றுமையை பூரண சுயராஜ்யம் பெறுவதற்கு முன் முடியாது” என்று காந்தியார் வட்ட மேஜை மகாநாட்டில் சொன்னார்.

மற்றும் “முஸ்லிம் லீக்கை ஒரு ஸ்தாபனமாக ஒப்புக்கொள்ள முடியாது” என்று தோழர் ஜவாஹர்லால் சொன்னார்.

வெற்றி பெற்ற மமதையில் அவரே “வேறு கட்சிகளுடன் சமாதானம் செய்துகொண்டு சுயராஜ்யம் பெறுவதைவிட சுயராஜ்யம் தூரமாகிவிட்டாலும் குற்றமில்லை” என்று சொன்னார். அதே நேருவே. “ஜனாப் ஜின்னா முஸ்லிம்களுக்கு தலைவரல்ல” என்று சொனனார். முஸ்லிம்களின் ஒற்றுமையாலும் ஒன்றுபட்ட முயற்சியாலும் இன்று அவ்வளவு வீரர்களும் அவர்களது வீரமும் ஜனாப் ஜின்னா வீட்டுவாயிலில் அடிபணிந்துவிடவில்லையா என்று கேட்கின்றோம். ஆனால் அதே வீரர்களால் இன்று தமிழன் வீரத்தை மடத்தனம் என்று சொல்லப்படுகிறது.

தமிழன் கிளர்ச்சியை அடக்க அடக்கு முறை கோரப்படுகிறது. தமிழன் எதிர்ப்பை சாராயப்புட்டி போட்டு குடிவெறி என்று காட்டப்படுகிறது. தமிழன் பட்டினி கிடந்து உயிர்விடுவது மூர்க்கத்தனமென்றும்போக்கிரித்தனமென்றும் கூறப்படுகிறது. அதுவும் தோழர் காந்தியாலும் கனம் ஆச்சாரியாராலும் சொல்லப்படுகின்றது என்றால் தமிழர்கள் இனியும் உயிர் வாழவேண்டுமா என்ற கேட்பதோடு தமிழனுக்கு மானமுண்டு என்று சொல்லிக்கொண்டு வெளியில் தலை காட்ட இடமுண்டா என்று கேட்கவேண்டி இருக்கிறது.

#### காந்தி பட்டினி மர்மம்.

தோழர் காந்தியார் ஜெயிலில் அடைபட்டபோது மனப்பூர்த்தியாக வேண்டுமென்றே ஜெயிலில் இருந்து வெளிவர ஒரு தடவைபட்டினிஇருந்தார். அதாவது தனக்கு “ஹரிஜன சேவை செய்ய வசதி அளிக்க வேண்டும்” என்று பட்டினி இருந்தார் சர்க்கார் எவ்வளவோ வசதி அளிப்பதாக வாக்குறுதி கொடுத்தும் “காலை முதல் இரவுவரை தன்னிடம் யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமாலும் வந்துபோக வசதி இருக்கும்படி ஜெயில்கதவுகள் திறந்திருக்க வேண்டும்” என்றுபட்டினிஇருந்தார். அந்தப்பட்டினியால் சர்க்கார் காந்தியாரைவெளியில் விட்டு விட்டார்கள். இந்த பட்டினி காந்தியார் தன்னை பரிசுத்தம்

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க

# ஆச்சாரியார் ஆட்சி அநியாயம்.

(2ம் பக்கத் தொடர்ச்சி

செய்து கொள்வதற்காக இருந்தாரா? ஒரு குறிப்பிட்ட காரியத்தை அடைய எதிரிகள் இடமிருந்து இஷ்டமில்லாததை பலாத்காரமாய் தட்டிப் பறிக்க பட்டினி இருந்தாரா? என்று யோசித்துபார்க்க விரும்புகிறோம்.

மற்றும் வட்டமேஜை மகாநாடு நடத்தையில் தாழ்த்தப்பட்ட மக்கள் சர்க்காரிடம் இருந்துபெற்றுவந்த ஒருசுதந்திரத்தைபறிக்கசாகும்வரைபட்டினி என்று பட்டினி கிடந்தார். அதனால் தாழ்த்தப்பட்ட மக்கள் வெகு நாளாக தவமிருந்து பெற்ற தனித்தொகுதி உரிமை ஒரு வாரத்தில் பிடுங்கப் பட்டுப் போயிற்று இதனால் காந்தியார் தன்னைச் சுத்தம் செய்துகொள்ள பட்டினி இருந்தாரா அல்லது ஒரு சமூகத்தாரின் உயிர் போன்ற உரிமையைப் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொள்ள பட்டினி கிடந்தாரா என்று யோசிக்கும்படி வேண்டுகிறோம்.

மற்றும் இந் 5, 6 வருஷகாலமாக இந்திய நாட்டில் எத்தனை பேர்கள் பட்டினி கிடந்திருக்கிறார்கள். அவர்களில் அனேகரை காந்தியாரே கேட்டுக்கொண்டு பட்டினியை நிறுத்தும்படி செய்திருக்கிறார். இவர்களை எல்லாம் பார்த்து அவர்களது பட்டினி பலாத்காரமானது என்ற காரணத்தைச் சொல்லி தான் நிறுத்தச் சொன்னாரா? என்று கேட்கிறோம்

இவற்றை ஏன் குறிப்பிடுகிறோம் என்றால் இன்று 30 நாட்களாக ஹிந்தி கூடாது என்று சென்னையில் பட்டினி கிடக்கும் தோழர் ஸ்டாலின் ஜெகதீசன் அவர்களது பட்டினியைப்பற்றி தோழர் காந்தியார் ''இந்த பட்டினியானது வடிகட்டின பலாத்காரம்'' என்றும் ''அதற்குச்சிறிதும் இணங்கக் கூடாது'' என்றும் தந்தி கொடுத்திருக்கிறார் என்றால் சுதேசமித்திரனும் இதை ஆதரித்து இந்தமாதிரி பட்டினிக்கு இணங்கக்கூடாது என்று எழுதுவது என்றால் மற்றும் சில பார்ப்பனப் பத்திரிக்கைகளும் பார்ப்பனரல்லாத மானங்கெட்ட கூலிப்பத்திரிக்கைகளும் ''இக்[illegible] பூச்சாண்டிக்கு எல்ல[illegible] பயப்பட முடியாது'' என்று எழுதுவது என்றால் தோழர் ஆச்சாரியாரும் காந்தியார் பட்டினி தன்னைப்பரிசுத்தம் செய்துகொள்ளத் தக்கது என்றும் மற்றவர்கள் பட்டினி கலவரத்தைஉண்டாக்கத்தக்கது என்றும்சொல்லுவதால் இதை குறிப்பிட்டோம் என்பதோடு இவர்களுடைய அகம்பாவமும் அயோக்கியத்தனமும் எப்படிப்பட்டது என்பதையும் தமிழர்கள் எப்படி நடந்தால் இவர்களுக்கு புத்தி கற்பிக்க முடியும் என்பதையும் ஒவ்வொரு தமிழ் மகனையும் சிந்தித்துப்பார்த்துச் செயலில் இறங்கும்படி வேண்டிகொள்வதற்காகவும் எழுதுகிறோம்.

### ராஜீ முயற்சி.

மற்றும் சில தமிழ்மக்கள் ஆச்சாரியாருக்கும், தோழர் ஸ்டாலின் ஜெகதீசனுக்கும் ராஜிசெய்ய முயற்சிப்பதாக வெளிவந்து ராஜி நிபந்தனையாக ''ஹிந்தியை கட்டாயபாடமாக வைக்கப்படுமே ஒழிய அதில் பரீட்சை வைக்காமலே மற்ற படிப்புகளில் மாத்திரம் தேறி இருந்தால் மேல் வகுப்புக்கு அனுப்பப்படும்'' என்று ஆச்சாரியார் ஒப்புக்கொள்வதாகச் சொல்லி ராஜி பேசுகிறார்கள். ஹிந்தியை பரீட்சை வைப்பதில்லை என்று கல்வி மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் 3 மாதத்துக்கு முன்பே ஈரோட்டில் சொல்லிவிட்டார். இதில் ஆச்சாரியார் தயவு என்ன வேண்டி இருக்கிறது என்பது விளங்கவில்லை. என்னவானாலும் ஆச்சாரியார் பிடிவாதம் சிறிதும் குறையவில்லை என்றுதான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. இப்பிடிவாதத்தை தமிழர்கள் ஒற்றுமையாலும் ஒன்றுபட்ட முயற்சியாலும் தான் ஒழிக்க வேண்டியிருக்கிறது.

இதற்காகவே 28-5-38 ல் திருச்சியில் ஒரு கமிட்டி கூட்டம் கூட்டப்பட்டது. அதில் ஹிந்தியை ஒழிக்கப் போர் தொடுக்க பல முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

### பலாத்காரப் புரளி.

அம் முறைகளுக்கு தமிழ் மக்கள் ஆதரவளித்து போரில் இறங்கி வெற்றிபெறச் செய்ய வேண்டியது தமிழர்களின் கடமையாகும் என்பதை ஒவ்வொரு தமிழரும் உணர வேண்டும் என்பதாக வேண்டிக்கொள்ளுகிறோம். போரில் காந்தியார் மிரட்டும் பலாத்காரத்தைப்பற்றி எவரும்கவலைப் படக்கூடாது. பலாத்காரத்துக்கு இந்த உலகில் காந்தியார் மாத்திரமே பாஷியக்காரரென்ற கருதும் முட்டாள் கோஷ்டியில் நாம் சேர்ந்தவரல்ல. உண்மையில் பலாத்காரம் என்றால் சரீரத்திற்கு நோவுண்டாகும்படி செய்வதும் மனிதனுடைய சரீரபலத்தை மற்றொருமனித சரீரத்தின் மீது பிரயோகிப்பதையுமேநாம்பலாத்காரம்என்று கருதுகிறோம். அப்பேர்ப்பட்ட பலாத்காரம் நமக்கு சுமார் 20-வருஷமாகவே கூடாத-கண்டிப்பாய் கூடாத காரியமாயிருந்து வருகிறது. நாம் வகுக்கும் எந்த போர்முறையிலும் இம்மாதிரி பலாத்காரத்தை அறவே வெறுத்தும் நீக்கியும் வந்திருக்கிறோம். ஆதலால் திருச்சி போர் முறையானது இப்படிப்பட்ட பலாத்காரமில்லாமல் மற்றபடி எப்படிபட்ட முறையானாலும் அதற்கு தமிழ் மக்கள் இசைந்து ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இதை முடிக்கிறோம்.

---

# தென் திருநெல்வேலி ஜில்லா போர்டு கூட்டம்.

### மோரப்பநாட்டில் பாலம் கட்ட அநுமதி.

(ஒரு நிருபர்)

திருநெல்வேலி, மே 29

மேற்படி ஜில்லா போர்டின் சாதாரணக் கூட்டம் நேற்று ராவ்பகதூர் ஐ. சி. ஈஸ்வரம் பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் திசையான்விளைக்கும் திருச்செந்தூருக்கும் ஓடிக்கொண்டிருக்கும் டிராம்வே சொந்தக்காரர் அனுப்பிய டிரான்ஸ்பரை ஏற்றுக் கொள்வதாகவும் மனுதாரர் தம்முடைய நிபந்தனைகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

தாம்பரபாணி ஆற்றில் மொரப்பநாட்டுக்குப் பக்கத்தில் 40 அடி அகலமுள்ள 26 ஸ்பான்கள் கொண்ட ரூ. 3,20,000ல் ஒரு பாலத்தைக்கட்டும் திட்டத்தைச்சர்க்கார்இஞ்சினீயர் ஒப்புக் கொண்டு விட்டதாக தலைவர் தெரிவித்தார்.

வீரவநல்லூரில் ஒரு டிஸ்பென்சரி ஏற்படுத்துவதென்றும்முடிவு செய்யப்பட்டது.

மீட்டிங் ஹாலில் தலைவருடைய படத்தை பிரதிஷ்டை செய்வது என்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.